ஆகஸ்ட் 13

## புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்

## (1599 – 1621)




இவருடைய தந்தை காலணிகள் செய்து வந்தார். அருளப்பர் இளம் வயதிலேயே அபூர்வ பக்தியுள்ளவர். ஞான போதகங்களுக்கு மிகுந்த கவனத்துடன் செவி கொடுப்பார். வெள்ளிக்கிழமை தோறும் மாலையில் வெறும் காலுடன் நடந்து சிலுவைப்பாதை செபிப்பார். 17 வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். இவர் அபூர்வ பக்தியும், புத்தியும் உள்ளவராதலால் கல்வி கற்க இவரை உரோமைக்கு அனுப்பினார்கள். ஒரு தோழனோடு 900 மைல் நடந்து உரோமையில் சேர்ந்தார். போய் சேர பத்து வாரங்கள் ஆயிற்று. புனித ஞானப்பிரகாசியார் வசித்த அறையே இவருக்கு தரப்பட்டது. இதைப்பற்றி இவர் மிக மிக மகிழ்ந்தார். ஏனெனில் புனித ஞானப்பிரகாசியாரது வாழ்க்கை வரலாற்றைப் படித்ததன் விளைவாகவே இவர் இயேசு சபையில் சேர்ந்தார். “கடவுளுக்கும் பெரியவர்களுக்கும் மிகுந்த கவனத்துடன் நான் செவிசாய்ப்பேன். இப்பொழுது நான் புனிதனாகாவிட்டால் ஒரு பொழுதும் புனிதனாக மாட்டேன்” என்று இவர் அடிக்கடி சொல்வார். தேவதாய் மீது இவருக்கு அதிக பக்தியுண்டு. சிறப்பாக அவளது அமல உற்பவத்துக்கு இவர் மிகுந்த வந்தனை செய்து வந்தார். கோயிலில் இருந்த அவளது திருச்சுரூபத்தை ஒவ்வொரு நாளும் சந்திப்பார். சபையின் சட்டங்களுக்கு நுணுநுணுக்கமாக கீழ்ப்படிந்தார். “சபையின் சட்டங்களுக்கு கீழ்ப்படிவதற்கு ஏற்ப, ஆன்ம வாழ்வில் முன்னேற்றமும் ஏற்படும்” என்பார். கடவுள் மீது மிகுந்த அன்புள்ளவர், எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பார். அடக்க ஒடுக்கமுள்ளவர்.

சிந்தனை:

பாடுபட்ட சுரூபம், செபமாலை, சபையின் சட்ட புத்தகம் இவைகளை என்னிடம் கொடுங்கள் நான் அமைதியாக இறப்பேன். (புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்)

செயல்:

புனித பெர்க்மான்ஸ் அருளப்பரே, நாங்கள் உம்மைப்போல் செபமாலையையும், பாடுபட்ட சுரூபத்தையும் திருச்சபையின் சட்டங்களையும் நேசிக்கும் வரம் பெற்றுத் தாரும்.